3. அறிவிப்புகள்.

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களையும், அவையுரிமைக் கேள்வியையும் ஒற்றிவைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்ட்டின், திரு. சுப்பையா, திரு. கருப்பையா ஆகிய மூவரும் ஆலங்குளத்தில் கட்டடம் இடிந்து விழுந்ததைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம்கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி அவர்கள் கொடுத்துள்ள ஒற்றி வைப்புத் தீர்மானமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாததால் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளில் 244-வது விதியின்கீழ், 41-வது விதி பிரிவு (3)ன் படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(5) கவன ஈர்ப்பு.

(அ) இராசிபுரம் கூற்றத்தில் மழையின்மையும் மக்கள், கால்நடை அல்லல் நீக்கத் துயர் தணிப்பு நடவடிக்கைகளும்.

(ஆ) மேட்டூர் வட்டம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மழையின்மையும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தலும்.

திரு. பெ. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இராசிபுரம் கூற்றத்தில் (தாலுக்கா) பருவ மழையின்மையால் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் உழவர் பெருங்குடியினர் அவதியுறும் நிலையில் ஆடுமாடுகளுக்குத் தீவனமின்றி அல்லற்படும் நிலைபற்றியும், உடனடியாகத் துயர்தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : மேட்டூர்தாலுக்கா கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இரண்டு வருடங்களாக மழை சரியாக இல்லாததால் விவசாயிகள் வாங்கி இருக்கும் கடன்களையும் வரிகளையும் கட்டமுடியாமலிருப்பதால் அந்தப் பகுதியைப் பஞ்சப் பகுதியாக அறிவித்து அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இராசிபுரம் வட்டத்தில் குடி தண்ணீர் பற்றுக்குறை இருப்பதாக சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவித்துள்ளார். இந்த வட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக இதுவரை ரூ. 37,240 செலவு செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஏற்கனவே வழங்கிய ரூ. 2 லட்சத்துடன், அரசின் வருவாய்த்துறை

அண்மையில் ரூ. 2·50 லட்சம் வழங்கியுள்ளது. மேற்கொண்டும் ரூ. 5 லட்சம் ஒதுக்கிக் கொடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டியுள்ளார். அவரது வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் உள்ளது. தீவனம் கிடைப்பதாகவும், துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர் அறிவித்துள்ளார்.

கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் குளத்தூர் ஊராட்சி ஒன்றிய உழவர்கள் அனுபவிக்கின்ற இடர்ப்பாட்டினைப் பொறுத்தவரையில், மேட்டூர் உதவிக் கலெக்டரிடமிருந்து நிலைமையைக் கேட்டறிந்த பின்னர் அறிக்கை அனுப்புவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வாக்குறுதி அளித்துள்ளார். இப்போதுள்ள நிலையில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடன் தவணைகளை வசூலிப்பதை ஒத்திப்போடலாமென மாவட்ட ஆட்சித்தலைவர் கருத்தறிவிக்கலாம். அரசிடமிருந்து இதற்குச் சாதகமான பதிலே கிடைக்கும். எனினும், அத்தகைய தவணைத் தொகைகளை வசூலிப்பதை ஒத்திப்போட வேண்டிய நிலை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து மேற்கொண்டு அறிக்கை கிடைத்தபின் இது குறித்து அவசியமான கட்டளைகள் பிறப்பிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: அங்கே உள்ள உதவிக் கலெக்டர் அவர்களிடத்தில் கடன்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்திருறார்கள். பஞ்சாயத்து யூனியனும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இதுபற்றி அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதியான உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் உதவித் தலைவரிடம் இருந்து அறிக்கை வரவேண்டும். அவர் ஒத்தி வைக்கலாம் என்று சொன்னால் கண்டிப்பாக அரசாங்கம் ஒத்தி வைக்கும் முறையில்தான் முடிவு எடுக்கும். அவருடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை விரைவில் அனுப்புமாறும் வற்புறுத்தியிருக்கிறோம்.

(இ) திருச்சி மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவ மழையின்மையும், கடன் வசூலை ஒற்றி வைத்தலும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுகோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக, திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவமழை பொய்த்தமையால் விளைச்சல் இன்று குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்கவேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம புதுக்கோட்டை பகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலும், குறிப்பாக திருமயம் தொகுதியில் பல இடங்களிலும், மற்றும் அரியலூர், உடையார்பாளையம் ஆகிய வட்டங்களிலும் பருவ மழை பொய்த்தமையால், விளைச்சல் இன்றி குடிதண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, கடன் வசூலிப்பதை ஒற்றி வைக்க வேண்டிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.